செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 193 நாள்: 4/4/17

பத்திரிகை செய்தி

ஸ்மார்ட் குடும்ப அட்டையில்
மூத்த பெண் உறுப்பினரை குடும்ப தலைவராக பதிவு.

01/04/2017-ம் தேதி முதல் தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக "ஸ்மார்ட் குடும்ப அட்டை" வழங்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக, வேலூர் மாவட்டத்தில் வேலூர், வாலாஜா மற்றும் அரக்கோணம் ஆகிய தாலுக்காக்களுக்கு 34756 குடும்ப அட்டைகள் அச்சடித்து வரப்பெற்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு, புதிய ஸ்மார்ட் குடும்ப அட்டை அச்சடித்து வரப்பெற்றவர்களுக்கு அவர்கள் பதிவு செய்துள்ள கைப்பேசி எண்ணுக்கு SMS அனுப்பப்படுவதுடன், PIN எண்ணும் அனுப்பிவைக்கப்படும். இந்த குறுஞ்செய்தியை அட்டைதாரர் நியாயவிலைக் கடை விற்பனையாளரிடம் காண்பித்தவுடன், விற்பனையாளர் PoS இயந்திரத்தில் அட்டைதாரரின் ஸ்மார்ட் கார்டினை Activate செய்து விநியோகிப்பார். இவ்வாறு அனுப்பப்படும் PIN எண் 7 நாட்களுக்கு செயலில் இருக்கும். ஓரிரு நாட்களில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை.

முன்னுரிமை குடும்ப அட்டைகளில் (PHH Cards) தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்-2013-ன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட மூத்த பெண் உறுப்பினரையே குடும்பத் தலைவராக ஸ்மார்ட் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். எனவே, புகைப்படம் மாற்றப்பட்டுள்ளதாக கருதி, புகார் செய்து குடும்பத் தலைவரை மாற்றம் செய்ய முயற்சிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், குடும்பத்திலுள்ள நபர்களின் ஆதார் எண் அடிப்படையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேட்டில் உள்ள முகவரியே ஸ்மார்ட் குடும்ப அட்டையில் முகவரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில், தவறு இருப்பின், தற்போதைய வசிப்பிட முகவரியை tnpds.com என்ற இணையதளத்தில், மாற்றம் செய்யப்படவேண்டிய விவரங்களை மனுதாரரே மாற்றி பதிவு செய்யலாம். இவ்வாறு மாற்றப்பட்ட/மேம்படுத்தப்பட்ட

விவரங்களுடன் கூடிய ஸ்மார்ட் கார்டு வேண்டுமெனில், அருகிலுள்ள அரசு இ-சேவை மையத்தில் நகல் ஸ்மார்ட் குடும்ப அட்டையை அச்சடித்து பெற்றுக்கொள்ளலாம்.

இதனைப்போலவே, புதிய குடும்ப அட்டை, நகல் குடும்ப அட்டை, உறுப்பினர் பெயர் சேர்த்தல், உறுப்பினர் பெயர் நீக்குதல், புகைப்படம் மாற்றம், முகவரி திருத்தம் போன்ற குடும்ப அட்டை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும், மனுதாரரே tnpds.com என்ற இணையதளத்திலோ அல்லது அரசின் இ-சேவை மையங்களிலோ சென்று பதிவு செய்துகொண்டு மேம்படுத்தப்பட்ட சேவையை பெறலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

ந.க.ஜே1/8278/2016

மாவட்ட வழங்கல் அலுவலகம்,
வேலூர்.
நாள்:03/04/2017

ஒம்/-சி.அ.ராமன்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

//உத்திரவு படி//

மாவட்ட வழங்கல் அலுவலர்,,
வேலூர் மாவட்டம்.

3/4/17

செ.மு.தொ.அ.
வேலூர் - 9.